இந்தியாவிலிருந்து வந்திருக்கும் அன்பு வெளிநாட்டு ஊழியர்களே

உங்கள் உடல்நலம், மீண்டும் வேலை தொடங்குதல், வேலை மற்றும் பணம் அனுப்புதல் போன்ற உங்களுக்கு அக்கறைக்குரிய விஷயங்கள் பற்றி பின்வருவன அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளாகும். உங்களின் அக்கறைகள் போதியளவில் தீர்க்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

நன்றி!

| **உடல்நலம்** | |
|---|---|
| எனக்கு உடல் நலமில்லை. நான் என்ன செய்யலாம்? | நல்ல சொந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதுடன் உங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதும் முக்கியம். உங்கள் உடல் நலத்தை அன்றாடம் கண்காணித்து நோய் பற்றிய அறிகுறிகள் ஏதேனும் இருந்தால் அது பற்றி அறிவிக்க வேண்டும்.<br><br>உங்களுக்கு காய்ச்சல், நெஞ்சு வலி அல்லது மூச்சுவிடுவதில் சிரமங்கள் இருந்தால், உங்கள் விடுதியில் உள்ள நடமாடும் பராமரிப்பு/மருத்துவக் குழுவினரை அல்லது மருத்துவ நிலையத்தில் உள்ளவர்களிடம் உடனடியாக மருத்துவ ஆலோசனை கேளுங்கள். மாற்றுவழியாக, FWMOMCare செயலியில் உள்ள தொலைமருத்துவச் சேவை (Telemedicine) செயல்பாடு மூலம் மருத்துவரிடம் கலந்து ஆலோசனையும் கேட்கலாம். அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நிலைமையை எதிர்கொண்டால் (நெஞ்சு வலி, மூச்சுவிடுவதில் சிரமங்கள்) 995 எனும் எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.<br><br>நீரிழிவு நோய் அல்லது உயர் இரத்த அழுத்தத்திற்கு அன்றாடம் மருந்து உட்கொள்ளவேண்டிய நிலை இருந்து, உங்கள் மருந்து தீர்ந்துபோயிருந்தால், மேற்குறிப்பிட்ட வழிகள் மூலம் உங்கள் மருந்தை பெற்றுக்கொள்ளலாம்.<br><br>FWMOMCare செயலியில் உள்ள தொலைமருத்துவச் சேவை (Telemedicine) செயல்பாட்டை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றி இந்தக் காணொளி உங்களுக்கு வழிகாட்டும்.<br>https://youtu.be/OY4nQNu1j2w<br><br>உங்கள் பாதுகாப்பையும் உடல்நலத்தையும் உறுதிசெய்ய, உடனடி சிகிச்சையை நாடுவது முக்கியம். |
| என் நண்பர் துயருக்கு ஆளாகியுள்ளார் என்றும் அவருக்கு உதவி | நீங்கள் அல்லது உங்கள் நண்பர் பின்வரும் அறிகுறிகளை அனுபவிக்கிறீர்களா?<br>• தூக்கமின்மை<br>• பசியின்மை<br>• ஊக்கமிழந்த உணர்வு |

| | |
|---|---|
| தேவைப்படுகிறது என்றும் நான் எப்படி அறிந்துகொள்வது? | • தனக்குத்தானே தீங்கிழைத்தலில் ஈடுபடுதல்<br>• ஏமாற்றமடைந்த மற்றும் கவலைகொள்ளும் உணர்வு<br><br>பின்வரும் மூன்று நடவடிக்கைகள் வழி நீங்கள் உதவலாம் :<br>• உங்கள் நண்பரின் நடத்தைகள் மாறிவிட்டதை **அடையாளங் கண்டுகொண்டு**, அவரின் கவலைகளுக்கான காரணங்கள் என்ன என்பதை கேட்டறிந்து கொள்ளுங்கள்<br>• கொவிட்-19 கிருமித் தொற்று ஏற்பட்ட பெரும்பாலான நோயாளிகள் அதிலிருந்து குணமடைய முடியும் என்பதை **அவருக்கு மீண்டும் உறுதிபடக் கூறுவதுடன்**, அவரை அவரின் நண்பர்களும் குடும்பமும் கவனித்துக் கொள்வார்கள் என்றும் சொல்லுங்கள்<br>• **அவரின் முதலாளியின்** உதவியை நாடச் சொல்லுங்கள், கலந்து ஆலோசனை பெறுவதன் மூலம் அல்லது மருத்துவ நிலையத்திலிருந்தும் உதவி பெறலாம் என்று **யோசனை கூறுங்கள்**<br><br>ஆலோசனை வழங்கும் பின்வரும் அவசரச் சேவை தொலைபேசி எண்ணில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்:<br><br>1. +65 31384443 எனும் தொலைபேசி எண் வழி ஆலோசனை பெறும் நேரத்திற்கு ஏற்பாடு செய்யும் வேண்டுகோளை ஹெல்த்சர்வ் (Health Serve) அமைப்புக்கு தயவு செய்து வாட்ஸ்அப் மூலம் அனுப்புங்கள்<br><br>2. ஆலோசனை உதவி நாட 6978 2724 எனும் எண்ணில் (திங்கள் முதல் வெள்ளி வரை) HEAR4U-யை தயுவு செய்து அழையுங்கள்.<br><br>3. அல்லது உதவிக்காக 6536 2692 எனும் எண்ணில் வெளிநாட்டு ஊழியர் நிலையத்தை அழையுங்கள். |
| **வேலைக்குத் திரும்பச் செல்லுதல்** | |
| நாங்கள் எப்போது வேலைக்குத் திரும்பச் செல்லலாம்? | கொவிட்-19 கிருமித் தொற்று உங்கள் விடுதியில் அகற்றப்பட்டு, உங்கள் வேலையிடம் மீண்டும் திறக்கப்பட்டவுடன், நீங்கள் உங்கள் வேலையை மீண்டும் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து உங்களுக்கு அனுமதியளிக்க, உங்கள் முதலாளி மற்றும் விடுதியை நடத்துபவருடன் மனித வள அமைச்சு பணியாற்றி வருகிறது.<br><br>மேலும், நோய்த்தொற்றிலிருந்து குணமடைந்த ஊழியர்களுக்கு (BRWs) அல்லது கிருமித் தொற்று அகற்றப்பட்ட விடுதிகளுக்கான புளோக்குகளை உருவாக்க நாங்கள் உங்கள் விடுதியை நடத்துபவர்களுடன் பணியாற்றி வருகிறோம். கிருமித் தொற்றிலிருந்து குணமடைந்த, கொவிட்-19 கிருமித் தொற்றுச் சோதனையில் தொற்று |

| | |
|---|---|
| | இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள், அல்லது தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் அல்லது தங்கும் வசதிகள் உள்ள வெளியிடங்களிலிருந்து வந்த ஊழியர்களை இந்த விடுதிகள் தங்க வைக்கும்.<br><br>பின்வரும் சூழ்நிலைகளில் நீங்கள் வேலைக்குத் திரும்பலாம்:<br>• உங்கள் முதலாளிக்கு அனுமதி வழங்கப்பட்டு, உங்கள் வேலையிடம் மீண்டும் திறக்கப்படும்போது.<br>• கொவிட்-19 கிருமித் தொற்று இல்லை என உங்கள் விடுதியில் அல்லது புளோக்கில் தங்கியிருப்போர் அனைவரும் சோதிக்கப்பட்ட பின்னர்.<br>• FWMOMcare, SGWorkPass மற்றும் TraceTogether ஆகிய செயலிகளை நீங்கள் பதிவிறக்கம் செய்து பதிவுசெய்து கொண்ட பின்னர்<br><br>வேலைக்ககுத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படும்போது, வேலை முடிந்ததும் உங்கள் விடுதிக்கு உடனடியாகத் திரும்பி வந்து உங்கள் அறையிலேயே நீங்கள் இருக்கவேண்டும். அங்கு தங்கும் மற்றவர்களுடன் கலந்துறவாடுதலையும் நீங்கள் குறைத்துக்கொள்ளவேண்டும். BRWகள் அல்லது கிருமித் தொற்று அகற்றப்பட்ட விடுதிகளில் வசிப்போர், கொவிட்-19 கிருமித்தொற்றால் மீண்டும் பாதிக்கப்படாமல் இருப்பது மிகவும் முக்கியம்.<br><br>உங்களை நாங்கள் தொடர்ந்து நன்றாகக் கவனித்துக்கொள்வோம் என்பதில் நீங்கள் நம்பிக்கை கொள்ளலாம். உணவும் மருத்துவ ஆதரவும் உங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படும். உங்களுக்கு உடல் நிலை சரியில்லை என்றால் அல்லது நீரிழிவு அல்லது உயர் இரத்த அழுத்தம் இருந்து மருந்து தேவைப்பட்டால் உங்களுக்கு எல்லா நேரத்திலும் மருத்துவக் கவனிப்பு கிடைக்கும். உங்கள் விடுதில் உள்ள மருத்துவ நிலையத்தை நீங்கள் அணுகலாம் அல்லது உங்கள் கைத்தொலைபேசி வழி மருத்துவரைக் காணலாம்.<br><br>நீங்கள் இன்னும் கிருமித் தொற்றுக்கு சோதிக்கப்படவில்லை என்பது பற்றி கவலைப்பட வேண்டாம். ஜூலை 2020 குள் எல்லா விடுதிகளிலும் நாங்கள் சோதனைகளை நடத்தத் தொடங்குவோம். |
| என் முதலாளி எனக்குச் சம்பளம் கொடுக்கவில்லை. நான் என்ன செய்யலாம்? | கொவிட்-19 கிருமித் தொற்றுப் பரவலைத் தடுக்கும் பொருட்டு, உங்களில் பலர் வேலைக்குச் செல்ல முடியவில்லை என்பதுடன் தற்காலிகமாக தொழில் மூடப்பட்டுள்ளதால் உங்கள் முதலாளியும் ரொக்கப்பபுழக்கப் பிரச்சனைகளை எதிர்கொள்ளலாம்.<br><br>கிருமித் தொற்று முறியடிப்பு அதிரடி நடவடிக்கை காலத்தில் சம்பள ஏற்பாடுகள் பற்றி உங்களிடம் விளக்கிக்கூறுமாறு |

| | |
|---|---|
| | மனிதவள அமைச்சு உங்கள் முதலாளிகளிடம் ஏற்கனவே கேட்டுக்கொண்டுள்ளது. இதற்குக் காரணம் அவர்களும் மேற்குறிப்பிட்ட கூறுகளை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இருப்பினும், உங்கள் முதலாளிகள் அரசாங்கத்திடமிருந்து ஆதரவைப் பெற்றுவிட்டனர் என்பதால் அவர்களால் தொடர்ந்து உங்கள் சம்பளத்தைக் கொடுக்க முடியும்.<br><br>உங்கள் முதலாளி உங்களுக்காக ஒரு வங்கிக் கணக்கைத் திறந்து அதில் உங்கள் சம்பளத்தைப் போடவேண்டும். .<br><br>உங்கள் முதலாளி உங்கள் சம்பளத்தைக் கொடுக்காவிட்டால், அல்லது வேலை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொண்டால், உங்கள் விடுதியை நடத்துபவரின் அல்லது உங்கள் விடுதியில் அமைந்திருக்கும் நம்பிக்கையையும் ஆதரவையும் வழங்கும் குழுக்களின் (Forward Assurance and Support Team (FAST) உதவியை நாடலாம். உதவிக்காக வெளிநாட்டு ஊழியர்களுக்கான நிலையைத்தையும் நீங்கள் தொடர்புகொண்டு அழைக்கலாம். |
| எந்த சூழ்நிலைகளில் நீங்கள் மீண்டும் வேலையைத் தொடங்கலாம்? | தங்கும் விடுதிகளில் கொவிட்-19 கிருமித் தொற்றுப் பரவல் தொடங்கியதிலிருந்து, உங்கள் விடுதி கொவிட்-19 தொற்றுப் பரவல் இல்லாதிருப்பதை உறுதி செய்ய உங்கள் விடுதி நடத்துனருடன் நாங்கள் அணுக்கமாகப் பணியாற்றி வருகிறோம். அதன் மூலம், உங்கள் வேலை இடமும் வேலைத் தளங்களும் மீண்டும் நடவடிக்கைகளைத் தொடங்கும்போது நீங்கள் வேலைக்கு மீண்டும் செல்ல முடியும்.<br><br>அதே சமயம், உங்கள் விடுதி நடத்துனர் அமல்படுத்தியுள்ள பாதுகாப்பான இடைவெளி போன்ற நடவடிக்கைகளை நீங்கள் கண்டிப்பாகப் பின்பற்றும் நல்ல தனிநபர் சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கும் பொறுப்புகளையும் உங்களுடன் நாங்கள் பகிர்ந்துகொண்டுள்ளோம். தேவையான எல்லா நடவடிக்கைகளையும் முதலாளிகள், விடுதி நடத்துனர்கள் மற்றும் ஊழியர்கள் முழுமையாக அனுசரிப்பது மிகவும் முக்கியமாகும். மூன்று தரப்பினரும் எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றிய பிறகே தங்கும் விடுதியைவிட்டு நீங்கள் வேலைக்குச் செல்ல முடியும்.<br><br>எல்லோரும், நீங்கள் உட்பட, வேலைக்குச் சுமூகமாகவும் பாதுகாப்பாகவும் திரும்பிச் செல்வதை உறுதி செய்வதற்குத் தங்கள் பங்கை ஆற்றவேண்டும். நீங்கள் பாதுகாப்பாக வேலைக்குத் திரும்பிச் செல்லவும், சமூகத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும் எல்லாத் தரப்பினரும் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றவேண்டும்.<br><br>**உங்கள் முதலாளிகள் செய்யவேண்டியவை**<br>• உங்கள் முகவரியை உறுதிசெய்யவேண்டும், ஆக அண்மைய முகவரியைக் கொடுக்கவேண்டும் |

- மீண்டும் திறக்க / தொழிலை மீண்டும் தொடங்க சம்பந்தப்பட்ட அரசாங்க அமைப்புகளிடம் விண்ணப்பிக்க வேண்டும்

**உங்கள் விடுதி நடத்துனர் செய்ய வேண்டியவை**



- பாதுகாப்பாக வசிக்கும் நடவடிக்கைகள்/சரிபார்ப்புப் பட்டியல் ஆகியவற்றை (நுழைவு/வெளியில் செல்லுதலுக்கான கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் விடுதிக்குள் தேவையான விதிமுறைகள் உட்பட) அமல்படுத்துல்
- விடுதியில் வசிக்கும் எல்லோரின் ஆக அண்மைய பெயர் பட்டியலை மனித வள அமைச்சிடம் கொடுத்தல்
- விடுதியில் வசிப்போர் மற்றும் வசிப்பிட ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்தி நிர்வாகம் செய்யவேண்டும்
- உடல்நலமில்லாதவர்களைக் கவனிக்கும் இடங்களை ஒதுக்குதல் மற்றும் தனிமைப்படுத்தப்படும் வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்
- ஊழியர்களை வேலைக்கு அனுப்பி, திரும்ப அழைத்துவரும் மாற்று நேரங்களை அமல்படுத்த உங்கள் முதலாளியுடன் திட்டமிடுதல்

**நீங்கள் செய்யவேண்டியவை**

- FWMOMCare, SGWorkPass மற்றும் TraceTogether ஆகிய மூன்று செயலிகளையும் பதிவிறக்கம் செய்தல்
- உங்கள் உடல்நிலையை ஒவ்வொருநாளும் கண்காணித்து அது பற்றி அறிவிக்க FWMOMCareயைப் பயன்படுத்துதல்
- நீங்கள் இருக்கும் இடத்தையும் உங்கள் தொலைபேசி எண்ணையும் ஆக அண்மைய நிலைப்படி தெரிவிக்க FWMOMCareயைப் பயன்படுத்துதல்

| FWMOMCare | SGWorkPass | TraceTogether |
|---|---|---|
| Android | Android | Android, iOS |
| iOS | iOS | |


தங்கும் விடுதிகளில் உள்ள வெளிநாட்டு ஊழியர்கள் பாதுகாப்பாக வேலைக்குத் திரும்ப உதவுவது
ஊழியர்கள் வேலைக்குச் செல்வதற்காக, தங்கும் விடுதிகளை விட்டு வெளியேற அனுமதிக்கப்படும் முன்னர், தங்கும் விடுதி நடத்துநர்கள், முதலாளிகள் மற்றும் ஊழியர்கள் சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.
முதலாளிகள்
1. வேலைகளை மீண்டும் தொடங்கச் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின் ஒப்புதலுக்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்
2. இணையத்தில் வெளிநாட்டு ஊழியர் முகவரி சேவையில் (OFWAS) ஊழியர்களின் முகவரிகள் புதுப்பிக்கப்படுவதை உறுதிசெய்யவும்.
தங்கும் விடுதி நடத்துநர்கள்
1. தங்கும் விடுதியில் பாதுகாப்பான வாழ்வு முறையை விவரிக்கும் சரிபார்ப்பு பட்டியலைச் செயல்படுத்தவும். (எ.கா. நுழைய மற்றும் வெளியேற கடுமையான கட்டுப்பாடுகள்)
2. அனைத்து குடியிருப்பாளர்கள் சம்பந்தப்பட்ட புதுப்பிக்கப்பட்டுள்ள பதிவேட்டை மனித வள அமைச்சுக்கு சமர்ப்பிக்கவும்
தங்கும் விடுதி குடியிருப்பாளர்கள்
1. FWMOMCare செயலி மூலம் அன்றாட சுகாதார நிலையைத் தெரிவிக்கவும் மற்றும் அறையில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்
2. TraceTogether செயலியின் சமீபத்திய பதிப்பைப் பதிவிறக்கம் செய்யவும். இங்கே ஸ்கேன் செய்யவும்.
தங்கும் விடுதிகளில் கொவிட்-19 நோய்த்தொற்று அகற்றப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டு, அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட்டனவா?
ஆம் என்றால்
• வேலையைத் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்ட ஊழியர்களின் விவரப் பட்டியலைத் தங்கும் விடுதி நடத்துநர்களுக்கு அனுப்பவும்
• ஊழியர்களைப் போக்குவரத்தில் ஏற்றிச் செல்வதற்கும், இறக்கிவிடுவதற்கும் பிரத்தியேக நேரங்களை ஏற்பாடு செய்யவும்.
ஆம் என்றால்
• ஒப்புதல் அளிக்கப்பட்ட ஊழியர்கள் மட்டுமே வேலைக்காக தங்கும் விடுதியை விட்டு வெளியேறுகிறார்கள் என்பதை சரிபார்க்க, நுழைவு / வெளியேறும் கட்டுப்பாடுகளைச் செயல்படுத்தவும்
• வெவ்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்கும், இறக்கிவிடுவதற்கும் வெவ்வேறு நேரங்களைத் திட்டமிட முதலாளிகளுடன் இணைந்து செயல்படவும்
ஆம் என்றால்
• வேலைக்குச் செல்வதற்கு மட்டுமே தங்கும் விடுதியை விட்டு வெளியேற வேண்டும். வேலை முடிந்ததும் உடனே திரும்ப வேண்டும்
இல்லையென்றால்
ஊழியர்கள் தங்கும் விடுதிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள்
நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு, www.mom.gov.sg இணையத்தளத்தை அணுகவும்
MINISTRY OF MANPOWER

<table>
<tr>
<td>நான் மீண்டும் எப்போது வேலைக்குத் திரும்பிச் செல்லலாம் என்று எனக்கு எப்படித் தெரியும்?</td>
<td>SGWorkPass-சைப் பயன்படுத்தி நீங்கள் வேலைக்கு மீண்டும் செல்லலாமா என்று சரிபார்த்துக்கொள்ளலாம். வேலைக்குத் திரும்பச் செல்லும் முன், TraceTogether மற்றும் FWMOMCare செயலிகளைப் பதிவிறக்கம் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.<br><br>
<table>
<tr><td>பச்சை: வேலைக்கு வெளியில் செல்லலாம்</td><td>சிவப்பு: வேலைக்கு வெளியில் செல்ல முடியாது</td><td>சாம்பல்: வேலைக்கு வெளியில் செல்ல முடியாது</td></tr>
<tr><td>
</td>
<td>
</td>
<td>
</td></tr>
</table></td>
</tr>
<tr>
<td>பின்வரும் மூன்று செயலி களையும் நான் எப்படிப் பயன்படுத் தலாம் - FWMOMCare, SGWorkPass மற்றும் TraceTogether?</td>
<td>1. FWMOMCare<br><br>
• FWMOMCare-யைப் பயன்படுத்தி உங்கள் உடல்வெப்பத்தையும் Sp02யும் (8 மணி நேர இடைவெளிக்கு இடையே) நாள் ஒன்றுக்கு இருமுறை பதிவுசெய்யுங்கள். இருமல், தொண்டை கரகரப்பு, மூக்குச் சளி வழிதல் அல்லது மூச்சுத்திணறல் போன்ற நோய் அறிகுறிகளை நீங்கள் அனுபவித்தால் அவை குறித்து நீங்கள் அறிவிக்கவேண்டும். எந்த ஒரு நேரத்திலாவது உங்களுக்கு உடல் நலம் நன்றாக இல்லை என்று உணர்ந்தால், உடனடியாக மருத்துவ நிலையத்திற்குச் செல்வதுடன் உங்கள் விடுதி நடத்துனரிடமும் தெரிவியுங்கள் அல்லது FWMOMCare-ல் உள்ள தொலைமருத்துவ செயல்பாட்டைப் பயன்படுத்தி மருத்துவர் ஒருருடன் தொடர்புகொள்ளுங்கள்.<br><br>
• அன்றாடம் வேலக்குச் செல்ல விடுதியைவிட்டுச் செல்லும்போதும் வேலை முடிந்து விடுதிக்குத் திரும்பி வரும்போதும் உங்கள் முகவரியை அறிவிக்க FWMOMCare-ல் உள்ள ‘Safe@Home’ செயல்பாட்டைப் பயன்படுத்தி உங்கள் அறையில் உள்ள QR கோடை (ஸ்கேன்) வருடுங்கள்.<br><br>
• FWMOMCare-ல் உள்ள ‘My Profile’ செயல்பாட்டைப் பயன்படுத்தி உங்கள் ஆக அண்மைய தொலைபேசி எண்ணைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்ளுங்கள்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>

**2. SGWorkPass**

- வேலைக்குச் செல்ல விடுதியைவிட்டுச் செல்ல நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்களா என்பதை அறிந்துகொள்ள SGWorkPass-சைப் பயன்படுத்தி உங்கள் வேலை அனுமதிச் சீட்டின் பின்புறம் உள்ள QR கோடை (ஸ்கேன்) வருடுங்கள். பச்சை நிற AccessCode நிலை உங்களிடம் இருந்தால், நீங்கள் உங்கள் விடுதி/வசிப்பிடத்தைவிட்டு வேலைக்குச் செல்ல அனுமதியுள்ளதா என்று சரிபார்த்துக்கொள்ளுங்கள். சிவப்பு அல்லது சாம்பல்நிற AccessCode நிலையை நீங்கள் பார்த்தால், நீங்கள் உங்கள் விடுதி/வசிப்பிடத்தைவிட்டு நீங்கள் வேலைக்குச் செல்ல முடியாது.

**3. TraceTogether**

- ஆக அண்மைய TraceTogether பதிப்பை பதிவிறக்கம் செய்து, உங்கள் தொலைபேசியில் உள்ள Bluetooth செயல்பாடு செயல்படுவதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்கள் விடுதியில் யாருக்காவது கிருமித் தொற்று இருந்து, தொற்று இருப்பதை அறியாமலேயே அவருடன் மற்றவர்கள் அணுக்கமான தொடர்புகளை வைத்திருந்தால், TraceTogether-ஆல் அவர்களை அடையாளப்படுத்த முடியும்.

- மேற்குறிப்பிட்ட செயலிகளை எப்டிப்பயன்படுத்துவது என்பதை அறிந்துகொள்ள காணொளிகளைப் பாருங்கள்:

<table>
<tr><td>FWMOMCare</td><td>SGWorkPass</td><td>TraceTogether</td></tr>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>https://youtu.be/bkLUI3ma_lw</td><td>https://youtu.be/G2geb0EAeKw</td><td>https://youtu.be/pD9HAjIS5DU</td></tr>
</table>

</td>
</tr>
<tr>
<td>என் தொலை பேசியில் செயலிகளைப் பதிவிறக்கம் செய்து நிறுவ முடியவில்லை என்றால் நான் என்ன செய்ய வேண்டும்?</td>
<td>மேற்குறிப்பிட்ட செயலிகளைப் பதிவிறக்கம் செய்து நிறுவுவதில் உங்களுக்கு ஏதேனும் சிரமங்கள் இருந்தால், உடனடி உதவிக்கு உங்கள் முதலாளி அல்லது விடுதி நடத்துனருடன் தொடர்புகொள்ளுங்கள்.</td>
</tr>
</table>

| வேலை தொடர்பான விஷயங்கள் | |
|---|---|
| என் வேலை அனுமதிச் சீட்டு செல்லு படியானதா என்பதை நான் எப்படிச் சரிபார்த்துக் கொள்ளலாம ? | உங்கள் வேலை அனுமதிச் சீட்டு செல்லுபடியானதா என்பதை சரிபார்த்து அறிந்துகொள்ள SGWorkPass-சை நீங்கள் பயன்படுத்தலாம். |
| என் வேலை அனுமதிச் சீட்டு காலாவதி ஆகும் போது நான் என்ன செய்ய வேண்டும்? | SGWorkPass-சைப் பயன்படுத்தி வேலை அனுமதிச் சீட்டின் காலாவதி தேதி உட்பட உங்கள் வேலை அனுமதிச் சீட்டின் செல்லுபடித்தன்மை ஆகியவற்றை சரிபார்த்து அறிந்துகொள்ளலாம்.<br><br>அது காலாவதியாகப் போகின்றது என்றால், உங்கள் வேலை அனுமதிச் சீட்டைப் புதிப்பித்துக்கொள்வது பற்றி உங்கள் முதலாளியிடம் கேட்டு அறிந்துகொள்ளுங்கள். புதுப்பிப்பை செயல்முறைப்படுத்த மனிதவள அமைச்சுக்கு நீங்கள் வரவேண்டியதில்லை. |
| என் வேலை அனுமதிச் சீட்டை என் முதலாளி ரத்து செய்யும்போது எத்தகைய ஏற்பாடுகளை அவர் எனக்குச் செய்ய வேண்டும்? | உங்கள் வேலை அனுமதிச் சீட்டை உங்கள் முதலாளி ரத்து செய்வதற்கு முன்னர், உங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை அவர் செய்யவேண்டும். உங்கள் முதலாளி வாங்கிய விமானச் சீட்டுடன் மட்டுமே நீங்கள் உங்கள் நாட்டுக்குச் செல்ல முடியும்.<br><br>உங்கள் முதலாளி உங்களுக்கு விமானச் சீட்டு ஒன்றை வாங்கவில்லை என்றால், நீங்கள் உங்கள் நாடு திரும்புவதற்கான விமானச் சீட்டை அவர் வாங்கும் வரைக்கும், நீங்கள் சிங்கப்பூரில் தொடர்ந்து தங்கி இருக்க அவர் உங்கள் சிறப்புப் பாசை (ஸ்பெசல் பாஸ்) நீட்டிக்க வேண்டும். நீங்கள் நாடு திரும்பும் வரை உங்கள் அன்றாடச் செலவினங்களுக்கு உங்கள் முதலாளிதான் பொறுப்பு.<br><br>உங்கள் முதலாளி உங்களுக்கு விமானச் சீட்டை வாங்கித் தர விரும்பவில்லை என்றால், மனிதவள அமைச்சை அல்லது 6536 2692 எனும் எண்ணில் வெளிநாட்டு ஊழியர் நிலையத்தை உதவிக்காக நீங்கள் அணுகலாம். |
| என் முதலாளி என் வேலை அனுமதிச் சீட்டை ரத்து செய்து என் சம்பளத்தைத் தராவிட்டால் நான் என்ன செய்ய வேண்டும்? | நீங்கள் சம்பளப் பிரச்சனைகள் எதனையும் எதிர்கொண்டால், அது குறித்து உங்கள் முதலாளியுடன் நீங்கள் பேச வேண்டும். நீங்கள் சிங்கப்பூரை விட்டுச் செல்லும் முன், உங்களுக்குக் கொடுக்கவேண்டிய மீதமுள்ள எல்லா சம்பளத் தொகையையும் உங்கள் முதலாளி கொடுக்கவேண்டும். சம்பளச் சர்ச்களை உங்கள் முதலாளியுடன் பேசி உங்களால் தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்றால், சர்ச்சை நிர்வகிப்புக்கான முத்தரப்புக் கூட்டணியிடம் (Tripartite Alliance for Dispute Management (TADM) சம்பளக் கோரிக்கை ஒன்றை தாக்கல் செய்யுங்கள்.<br><br>கூடுதலாக, உதவிக்காக விடுதி நடத்துனரை அல்லது உங்கள் விடுதியில் அமைந்துள்ள நம்பிக்கையையும் ஆதரவையும் |

| | |
|---|---|
| | வழங்கும் குழுவை (Forward Assurance and Support Team) (FAST) நீங்கள் அணுகலாம். அவர்கள் உங்களுக்கு உதவுவர். |
| என வேலை அனுமதிச் சீட்டு ரத்து செய்யப்பட்டதால் நான் என் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். நான் சிங்கப்பூரில் வேலை செய்ய திரும்பி வரலாமா? | ஆம், முடியும். உங்களால் மற்றொரு முதலாளியைக் கண்டுபிடிக்க முடிந்தால், உங்களுக்கு எதிராகப் பாதகமான பதிவேடுகள் இல்லை என்றால், வேலை செய்ய நீங்கள் சிங்கப்பூருக்குத் திரும்பி வரலாம். |
| மற்றொரு முதலாளிக்கு வேலை செய்ய வேண்டும் என்றால் நான் என்ன செய்ய வேண்டும்r? | இந்தக் கால கட்டத்தில் உங்களால் மற்றொரு முதலாளியைக் கண்டுபிடிக்க முடிந்தால், உங்களின் புதிய முதலாளி மனிதவள அமைச்சுடன் தொடர்புகொள்ளலாம். |
| **பணம் அனுப்புதல்** | |
| பணத்தைப் பாதுகாப்பாக என் வீட்டிற்கு அனுப்ப நான் எப்படி ஏற்பாடு செய்யலாம்? | 1. **தானியியக்க முறையில் பணம் அனுப்பும் கியோஸ்க்(கூடம்)**<br><br>உங்கள் விடுதியில் இருந்தால், தானியியக்க முறை பணம் அனுப்பக் கியோஸ்க்கப் பயன்படுத்துங்கள். சாத்தியமான நிலைமை அனுமதித்தால், உங்கள் விடுதி நடத்துனர் ஏற்பாடு செய்துள்ள ஒன்றுவிட்டு ஒன்றாக வரும் நேரங்களின்போது அவற்றை நீங்கள் பயன்படுத்தலாம்.<br><br>2. **பணம் அனுப்புவதற்கான இயைணத்தளங்களும் செயலிகளும்**<br><br>பணம் அனுப்ப உரிமம் (லைசென்ஸ்) பெற்ற இணையத் தளங்களையும் செயலிகளையும் மட்டும் பயன்படுத்துங்கள். உங்கள் வீட்டுக்குப் பணம் அனுப்பிவைக்க வாட்ஸ்அப் அல்லது மற்ற உடனடிச் செய்தி அனுப்பும் தளங்களைப் பயன்படுத்தாதீர்கள். உரிமம் பெற்ற நிறுவனமா என்பதை சிங்கப்பூர் நாணய வாரியத்தின் இணையத்தளத்திற்குச் (https://eservices.mas.gov.sg/fid) |

| | |
|---|---|
| | சென்று சரிபார்த்து அறிந்துகொள்ளுங்கள்.<br><br>மின்னியல்முறையில் பணம் அனுப்பும் தளங்கள் மூலம் உங்கள் வீட்டிற்கு எப்படிப்பணம் அனுப்பலாம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள இந்தச் சுவரொட்டி உங்களுக்கு உதவும். |

MINISTRY OF MANPOWER

(Updated 3 June 2020)

# மின்னியல் முறையில் பணத்தை வீட்டிற்குப் பாதுகாப்பாக அனுப்ப வழிகாட்டி

## மின்னியல் தளத்தைப் பயன்படுத்தும் போது பணத்தை பாதுகாப்பாக வீட்டிற்கு அனுப்ப இந்த ஆறு படிநிலைகளைப் பின்பற்றவும்:





### உங்கள் வங்கி கணக்கை அமைத்தல்

எஸ்எம்எஸ் மூலம் அல்லது ஏடிஎம் தானியங்கி இயந்திரம் மூலம் உங்கள் வங்கிக் கணக்கைச் செயல்படுத்தலாம். உங்கள் கணக்கைச் செயல்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டால் அல்லது உங்கள் ஏடிஎம் அட்டையைப் பெறவில்லை என்றால், தயவுசெய்து உதவிக்கு உங்கள் முதலாளியை அணுகவும்.



### உங்களுக்கு விருப்பமான பணம் அனுப்பும் முகவரை தேடும் செயலில் தீவிரமாக ஈடுபடுங்கள்

உங்களுக்குப் பழக்கமான பணம் அனுப்பும் முகவர், இணையம் வழி பரிவர்த்தனைகள் செய்பவரா என்பதை முதலில் தெரிந்துக்கொள்ளுங்கள். அவரிடம் இணையத் தளம் இருந்தால், பண பரிவர்த்தனையை அவரின் வலைத்தளம் அல்லது மொபைல் செயலி மூலம் செய்யலாம்.

**உங்கள் தேடலைக் குறைப்பதற்கு உதவ, பின்வருவனவற்றைக் கவனியுங்கள்:**
1) பணம் அனுப்பும் நிறுவனம் உரிமம் பெற்றுள்ளதா என்பதை அறிந்துக்கொள்ள, அவர்களின் பெயரை சிங்கப்பூர் நாணய வாரியத்தின் இணையத் தளத்தில் தேடவும். (**https://eservices.mas.gov.sg/fid**)
2) ஏற்றுக்கொள்ளப்பட்டப் பணம் செலுத்தும் முறை
3) பணம் உங்கள் குடும்பத்தைச் சென்றடைய எதிர்பார்க்கப்படும் காலம்
4) உங்கள் குடும்பத்தினர் பணத்தைப் பெறுவதற்கு என்னென்னவற்றை செய்ய வேண்டும்.
5) உங்கள் குடும்பத்தினர் பணம் பெறவில்லை என்றால், அதற்கானத் தீர்வு



### என்ன விவரங்கள் தேவை என்பதைக் கண்டறியவும்

சீரானதொரு பரிவர்த்தனைக்கு, என்னென்னத் தகவல்கள் தேவைப்படும் என்பதை எப்போதும் உங்கள் பணம் அனுப்பும் முகவரிடமிருந்து தெரிந்துக்கொள்ளவும்.

**உதாரணங்கள்:**
உங்களைப் பற்றிய விவரங்கள்: முழுப் பெயர், (FIN) அடையாள அட்டை எண், பிறந்த தேதி, மொபைல் எண் மற்றும் சொந்த நாட்டின் அடையாளம்
பணம் பெறுபவரைப் பற்றிய அடையாள விவரங்கள்: முழுப் பெயர், வங்கி கணக்கு எண், வங்கி பெயர் மற்றும் வங்கி கிளை



### தனிப்பட்ட விவரங்களை வெளியிடுவதில் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்

சரிபார்ப்பு காரணங்களுக்காக, உங்களின் அடையாளம் பணம் அனுப்பும் முகவர்களுக்குத் தேவைப்படும். உங்கள் வேலை அனுமதி அட்டையின் படத்தை அவர்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கலாம் அல்லது வீடியோ அழைப்பு மூலம் அவர்கள் உங்களைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் விவரங்களைக் கேட்பவரின் அடையாளத்தைச் சரிப்பார்த்தப் பிறகே, உங்கள் தனிப்பட்ட விவரங்களை நீங்கள் அவரிடம் வெளிப்படுத்த வேண்டும். பணம் அனுப்ப உரிமம் பெற்ற முகவர்களுடன் மட்டுமே செயல்படுங்கள்.

உங்கள் தனிப்பட்ட வங்கி பயனாளர் அடையாளம், கடவுச்சொல் / தனிப்பட்ட அடையாள எண் மற்றும் OTP (ஒரு முறை கடவுச்சொல்) ஆகியவற்றை பணம் அனுப்பும் முகவர் உட்பட யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். இந்த விவரங்களை யாரும் அறியக்கூடாது.




### பணம் அனுப்பும் முகவருக்குக் கட்டணம எவ்வாறு செலுத்துவது என்பதை அறிந்துக்கொள்க

ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டண முறையில் பணம் அனுப்பும் பரிவர்த்தனைக்கு உங்களால் பணம் செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**கட்டணம் செலுத்த சில பொதுவான முறைகள்:**
1) வங்கி பரிமாற்றம் / ஐ-வங்கி (i-banking)
2) பேலா (Paylah) அல்லது பேனாவ் (Paynow)
3) கடன் / பற்று அட்டை




### விவரங்களைப் பற்றி நன்கு தெரிந்து வைத்துக்கொள்வது அவசியமானதாகும்

கட்டணம் செலுத்துமுன் நீங்கள் இணையம் வழி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்க வேண்டியது அவசியமாகும்.
பூர்த்தி செய்யப்பட்ட பரிவர்த்தனையின் ஆதாரமாக ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பெறுநர் பணத்தைப் பெற்று விட்டார்களா என்பதை உறுதிப்படுத்த, அவரைத் / அவளைத் தொடர்பு கொள்ளுங்கள். பணம் செலுத்திய தேதியிலிருந்து ஏழு வணிக நாட்களுக்குள் பெறுநர் பணத்தைப் பெறுவதை பணம் அனுப்பும் முகவர்கள் உறுதி செய்ய வேண்டும். உங்கள் குடும்பத்தினர் பணத்தைப் பெறவில்லையென்றால் பணம் அனுப்பும் முகவரை விசாரிக்கவும்.

**MOM- இன் தந்தி ஒளிவழி (டெலிகிராம் சேனல்) வாயிலாக கொவிட்-19 பற்றியத் தகவல்களைத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்:**

| | |
|---|---|
| | **3. உங்கள் முதலாளியிடம் உதவி கேளுங்கள்**<br><br>உங்களால் உங்கள் வீட்டிற்குப் பணம் அனுப்ப இயலவில்லை என்றால், உதவுமாறு உங்கள் முதலாளியிடம் கேளுங்கள். பணத்தை அனுப்பிய பின்னர், பணம் அனுப்பப்பட்டதற்கான சான்றை உங்களுக்கு அவர் வழங்கவேண்டும்( எடுத்துக்காட்டாக, பரிவர்த்தனைப் படம்). |

**முக்கியமான தொலைபேசி எண்கள்**:

வெளிநாட்டு ஊழியர் நிலையம் (MWC) 6536 2692 (24 மணி நேரம்)
ஹெல்த்ஸர்வ் (HealthServe) 3138 4443 (WhatsApp அழைப்பு)
வெளி நாட்டு ஊழியர் நிலையம் இந்தியத் தூதரகம் 83509921; 98683975; 98674790

**கீழே உள்ள இணையத்தளம் வழி மனிதவள அமைச்சின் காளொணிகளை நீங்கள் பார்வைவிடலாம்**:

செயலிகளை எப்படிப் பதிவிறக்கம் செய்யபவது, கிருமித் தொற்றிலிருந்து மீண்டுவந்த ஊழியர்களின் அனுபவப் பகிர்வு போன்ற காணொளிகளை மனிதவள அமைச்சு வெளிநாட்டு ஊழியர்களுக்காகத் தயாரித்துள்ளது. இந்த காணொளிகளைக்காண QR கோடை வருடுங்கள்.

https://www.youtube.com/user/MOMsingapore